<u>நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் வங்கி தொழில்நுட்பம் குறித்த கருத்தரங்கம்</u>

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்க அமைப்பின் சார்பில் நிதி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு 06.12.2022 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு சங்க ஒருங்கிணைப்பாளர் ஆர். சாவித்திரி வரவேற்புரை வழங்கினார்.

''வங்கி கணினி தொழில்நுட்பம் - சாதகமான சூழலும் மற்றும் இடையூறுகளும்'' என்ற தலைப்பில் கல்லூரியின் இளநிலை கணினி அறிவியல் பாடப்பிரிவு துறைத்தலைவரும், கல்லூரி முன்னாள் மாணவர் சங்க அமைப்பின் தலைவருமான ஆர். நவமணி பேசினார்.

வங்கிகளில் தற்போதைய நிதி சார்ந்த நடவடிக்கைகள் அனைத்துமே கணினி மயமாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, இணையம் மூலமாகவே பணபரிவர்த்தனை நடைபெறுகிறது. டெபிட் கார்டு மற்றும் கிரெடிட் கார்டுகளை மையமாக வைத்து நூதன திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன. வங்கி வாடிக்கையாளர்களின் அலைபேசி எண்கள் வங்கி கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி வங்கியில் இருந்து பேசுகிறோம் என்று கூறி அப்பாவி வாடிக்கையாளர்களின் விவரங்களை சேகரித்து பணத்தை வங்கிக் கணக்கில் இருந்து மோசடியாளர்கள் எடுத்துக் கொள்கின்றனர். இதில் நன்கு படித்தவர்கள் கூட ஏமாறுவது உண்டு.

இது போன்ற போலி குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சலை வங்கி வாடிக்கையாளர்கள் தவிர்க்க வேண்டும். அப்படி நம்மையும் மீறி நம் வங்கிக் கணக்கில் பணம் எடுக்கப்பட்டதாக குறுஞ்செய்தி வந்தால் உடனே தேசிய சைபர் கிரைம் எண்ணை (155260) தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு உடனடியாக செயல்பட்டால் பணம் திரும்ப கிடைக்க பெருமளவு வாய்ப்புள்ளது. மேலும். தற்போது காவல் நிலையத்தில் சென்று தகவல் தெரிவிக்கும் முறை மாறி ஆன்லைன் எனப்படும் இணையம் மூலமாகவே புகார் அளிக்க முடியும் என்றார். சைபர் குற்றம் நிகழ்வதைத் தடுக்க ஏடிஎம் மற்றும் மின்னஞ்சல் கடவுச் சொல் எனப்படும் பாஸ்வேர்டை அடிக்கடி மாற்றம் செய்ய வேண்டும் என்றார்.

செஞ்சிலுவை துணை ஒருங்கிணைப்பாளர் வி. கலைவாணி நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்வில் ஏறத்தாழ 100 மாணவியர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

07/12/22

Trinity College for Women (Arts & Science)
Namakkal - 637 00